International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 03 Issue: 02 April to June 2021 www.irjtsjournal.org

# 'திருக்குறள் வெளிப்படுத்தும் ஐம்புலனடக்கம் - ஒரு சிறப்பாய்வு'

நாகரத்னம் சுதர்ஷினி

*விரிவுரையாளர், மொழிகள் துறை, சபரகமுவ பல்கலைக்கழகம்*

*இலங்கை*

***ஆய்வுச் சுருக்கம்***

அறிவினைக்கொண்டு ஐம்பொறிகளின் வழி வெளிப்படும் உணர்ச்சிகளை நெறிப்படுத்தும் புலனடக்கம் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியமாகிறது. ஐம்புலன்களை முறையாக கட்டுப்படுத்தும் போது மனிதன் பெருமையடைகின்றான் என்ற காரணத்தினால் இலக்கியங்கள் அதன் அவசியத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன. எனினும் புலனடக்கம் எனும் கருத்து ஒன்றாக இருப்பினும் இலக்கியங்கள் அதனை வெளிப்படுத்தும் வகையில் பல வேறுபாடுகளைக் கொண்டவனவாகக் காணப்படுகின்றன. இவ்வடிப்படையில்; அறம், பொருள், இன்பம் எனும் முப்பாலின் வழி வாழ்க்கைக்குரிய பல விடயங்கள் தொடர்பில் வெளிப்படுத்துகின்ற இலக்கியமாகிய திருக்குறள், ஐம்பொறி, ஐம்புலன் சார்ந்து வெளிப்படுத்துகின்ற விடயங்கள் யாவை, அவை மனிதனை வழிப்படுத்தும் வழிவகைகள் பற்றி வெளிப்படுத்துமாறு, புலனடக்கம் பற்றி வெளிப்படுத்துகின்ற விடயங்கள், அதிகாரங்களில் அதன் வைப்புநிலை என்பவற்றை அறியும் நோக்கோடு 'திருக்குறள் வெளிப்படுத்தும் ஐம்புலனடக்கம் - ஒரு சிறப்பாய்வு' எனும் தலைப்பின் கீழ் இவ்வாய்வு திருக்குறளை முதனிலை ஆய்வு ஆதாரமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

***திறவுச்சொற்கள்: திருக்குறள், ஐம்புலனடக்கம், ஐம்புலன்கள், அறஇலக்கியங்களில் புலனடக்கம்.***

## I.அறிமுகம்

மனிதன் மெய், கண், காது, மூக்கு, வாய் எனும் ஐம்பொறிகளின் வழி ஊறு, ஒளி, ஒலி, நாற்றம், சுவை எனும் ஐந்து உணர்ச்சிகளைப் பெற்றவனாக இவ்வுலகில் வாழ்கின்றான். ஐம்பூதங்களான நிலம், நீர், ஆகாயம், காற்று, தீ ஆகியவற்றை பிரதிபலிப்பனவாக மனித உடலில் ஐம்பொறிகள் காணப்படுகின்றன எனலாம். பொதுவாக உயிரினங்கள், அவை கொண்டுள்ள பொறிகளின் அடிப்படையில் ஓரறிவு கொண்ட உயிரினங்கள் முதலாக ஆறறிவு கொண்ட உயிரினங்கள் வரையாக வகைப்படுத்தப்படுகின்றன. இவற்றுள் ஓரறிவு முதல் நான்கறிவு வரையாக

வகைப்படுத்தப்படுகின்ற உயிரினங்கள் அவற்றின் பொறிகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஐந்தறிவு கொண்ட உயிரினங்களும் ஆறறிவு கொண்ட மனிதர்களும் பொறிகளின் அடிப்படையில் ஒன்றுபட்டு காணப்படுகின்ற அதேவேளை மெய், கண், காது, மூக்கு, வாய் எனும் இப்பொறிகளின் வழி வெளிப்படும் ஊறு, ஒளி, ஒலி, நாற்றம், சுவை எனும் ஐம்புலன்களும்; ஐந்தறிவு கொண்ட உயிர்களுக்கும், மனிதனுக்கும் ஒன்றுபட்டே காணப்படுகின்றன. எனினும் மனிதர்கள் தனது சிந்திக்கும் ஆற்றலினால் பிற உயிரினங்களிலிருந்து வேறுபட்டவர்களாகக் காணப்படுகின்றனர். இத்தனித்துவம் மனிதர்களுக்கு இன்றிமையாததாய் காணப்படுகிறது. இக்காரணத்தினால்தான், ஐந்தறிவு கொண்ட உயிரினங்களுக்கு வலியுறுத்தப்படாத புலனடக்கம் மனிதர்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது எனலாம்.

இலக்கியங்கள் காலத்தைக் காட்டுவனவாயும், அது படைக்கப்பட்டதன் இலக்கினை மனிதனுக்கு இயம்புவதாயும் காணப்படுகின்றன. பொதுவாக சங்கமருவிய காலத்திற் தோன்றிய அறநூல்கள் மனிதனுக்கு அறத்தினை போதிப்பனவாய் காணப்படுகின்றன. இத்தகு அறநூல்களுள் ஒன்றான திருக்குறள் முப்பாலின் வழி மனித வாழ்க்கையை கட்டமைக்க வல்ல பல அறம் சார்ந்த பல விடயங்களை எடுத்துரைக்கும் நூலாக இற்றை வரை போற்றப்படுகிறது. மனிதன் வாழ்வதற்குத் தேவையான அனைத்தையும் தன்னகத்தே கொண்டு காணப்படும் இந்நூல் 133 தலைப்புகளில் பல விடயங்களை எடுத்துரைக்கிறது. இன்றிமையா பல விடயங்களை வெவ்வேறு தலைப்புகளில் வெளிப்படுத்துகிறது. இவ்வகையில் மானிடனை பிற உயிரினங்களிடமிருந்து வேறுபடுத்தும் புலனடக்கம் எனும் தனித்துவம் பற்றிய பல கருத்துகளை வெளிப்படுத்துகிறது.

## II. புலன்களும் புலனடக்கமும்

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐந்தே ஐம்புலன்களாகும். இவற்றின் வெளிப்பாடு மிக இன்றிமையாதது எனினும் அவற்றை வகைதெரிந்து கட்டுப்படுத்துதல் வேண்டும் என்பதை,

சுவைஒளி ஊறுஓசை நாற்றமென ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.(27)

என்ற குறட்பாவினூடாக அறியமுடிகிறது. புலன்களை அடக்க அவற்றை நன்கு ஆராய்ந்து அறிவின் வழி அவற்றை நல்வழியில் செலுத்தும் செயல் வகைதெரிதல் எனப்படுகிறது. இவ்வகையில் மனிதனின் தனிச் சிறப்பாகிய சிந்திக்கும் ஆற்றலைக் கொண்டு சிந்தித்து புலன்களை கட்டுப்படுத்துதல் வேண்டும் என்பது தெளிவாகிறது. ஐம்புலனடக்கம் தொடர்பில் ,

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். (06)

என்ற குறட்பாவின் ஐம்பொறிகளின் வழி ஏற்படும் ஐம்புலன்களை கட்டுப்படுத்தி வேட்கைகளை இல்லாது செய்தவனின் பொய்யற்ற ஒழுக்கத்தின் வழி செல்பவன் நிலைத்து வாழ்வான் எனப்படுகிறது. இவ்வடிப்படையில் புலனைக்

கட்டுப்படுத்தியவனின் ஒழுக்கம் பொய்யற்றது அதுவே நிலையான புகழைப் பெற்றுத்தரவல்லது என்பது புலனாகிறது. அத்தோடு அதனை பின்பற்றி தானும் தனது ஐம்புலன்களை கட்டுப்படுத்தி நிலையான புகழைப் பெறுதல் வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. மு.வரதராசனார் ஐம்புலன்களையும் அவித்த இறைவனின் பொய்யற்ற ஒழுக்கநெறியில் நின்றவன் நிலையான நல்வாழ்வு பெறுவார் எனக் கூறியுள்ளமை புலனடக்கத்தின் மகத்துவத்தை மேலும் பறைசாற்றி நிற்கின்றது.

‘ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்…..’(25)

அதாவது தேவர்களுக்குத் தலைவனாக இருப்பினும் புலன்களைக் கட்டுப்படுத்தத் தவறின் பெருமைக்குரியவராகத் திகழமாட்டார் என்பதற்கும், புலன்களை சீர்மைப்படுத்தியோர் எனப்படுபவர்கள் அனைத்தும் கைவரப்பெற்றவர்கள் அவர்களால் எத்தகைய செயலையும் செய்வதற்கு இயலும் என்பதை துறவிகளும், முனிவர்களும் வெளிப்படுத்த தூண்டுகோலாக இந்திரனே இருப்பதால் புலனடக்கத்தின்; இன்றியமையாமையை உணர தேவர்களின் தலைவனே சிறந்த எடுத்துக்காட்டு என்பது வெளிப்படுத்தப்படுகிறது. மேலும் இக்குறட்பாவிலும் ஐம்புலனடக்கம் என்பது ஐந்து அவித்தல் எனும் பதத்தைக் கொண்டே வெளிப்படுத்தப்படுகிறது.

இங்கு பொறிகளின் வாயிலாகப் பிறக்கும் வேட்கைகளை அவித்தலே புலனடக்கம் என்பதை அறியமுடிகிறது. ‘அவித்தல்’ எனும் சொல் பக்குவப்படுத்தல், மாற்றுதல் எனப் பொருள்படுகிறது. அதுமட்டுமின்றி தீயைக் கட்டுப்படுத்துதல் எனும் பொருளைக் கொண்ட வகையிலும் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. அதாவது ஒடுக்குதல், கட்டுப்படுத்தல், குறைத்தல் என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. பொதுவாக தீயை அவித்தல் என்பதற்கு தீயை அழித்தல் என்றோ நீக்குதல் என்றோ பொருள் கொள்வது பொருத்தமற்றது. எனினும் அடக்குதல் என்ற பொருளில் தீயை அடக்குதல் என்பது பொருத்தமற்றது. ஏனெனில் தீயை கட்டுப்படுத்த இயலுமே தவிர அதனை அடக்குதல், அழித்தல் என்பது கடினமான செயலாகிறது. இவ்வாறு பரந்துபட்ட பொருளுடைய சொல் ஐம்புலனடக்கம் பற்றி வரைவிலக்கணப்படுத்த கையாளப்பட்டுள்ளமை சிந்திக்கத்தக்கது என்பதோடு மேற்கூறப்பட்ட விளக்கத்தின் அடிப்படையில் ‘அவித்தல்’ என்பதற்கு அடக்குதல் என்று பொருள் கொள்வதைக் காட்டிலும் பக்குவப்படுத்தல், மாற்றுதல் என்று பொருள் கொள்வதே முறையாகும். ஏனெனில் ஐம்புலன்கள் தீயைப் போன்றவை. அவற்றினால் நன்மை விளைவது போலவே தீமையும் விளைகின்றது. அத்தோடு, தீயை அடக்கமுடியாதது போலவே புலன்களையும் அடக்குதல் பொருத்தமற்றது என்பதால் வள்ளுவர் ஐந்து அவித்தல் என்று கூறுகின்றார். மேலும் அவித்து பக்குவப்படுத்தப்படும் விடயங்களினால் அதிக பலன் கிட்டுவது மட்டுமின்றி அப்பொருட்களை பழுதடையா வண்ணம் நீண்ட காலத்திற்கு பதப்படுத்தி வைக்கக்கூடியதாகவிருக்கின்றது. இவ்வடிப்படையில் புலனடக்கம் என்பது பக்குவப்பட்ட நிலை அந்நிலையினால் நீண்ட வாழ்வுகிட்டும் என்பது தெளிவாகின்றது. இவ்வடிப்படையில் புலனடக்கம் என்பது பொறிகளை அடக்கி அவற்றின் வாயிலாக வெளிப்படும் புலன்களை உணராது வாழுதல் அல்ல.

மாறாக பொறிகளின் வாயிலாக வெளிப்படும் புலன்களை பக்குவப்படுத்துதலே புலனடக்கம் என்பது வெளிப்படுத்தப்படுகிறது.

பொருட்களையோ அல்லது பிறவற்றையோ அவித்து பக்குவப்படுத்துதல் எளிதாய் காணப்பட்ட போதிலும் புலன்களை கட்டுப்படுத்துவது எங்ஙனம் என்பது பற்றி நீத்தார் பெருமை எனும் அதிகாரத்தில்,

‘உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்தது. ’ (24)

எனும் குறட்பாவின் வழி வருமாறு வெளிப்படுத்தப்படுகிறது. அதாவது உரன் எனப்படுவது அறிவு என மணக்குடவரும், மு.வரதராசனாரும், திண்மை என பரிமேலழகரும், உறுதி என கலைஞரும் சாலமன் பாப்பையாவும் தத்தமது உரைகளின் வழியே வெளிப்படுத்தியுள்ளனர். இவ்வடிப்படையில், அறிவு அல்லது உறுதியால் ஐம்புலன்களைக் காப்பது புலனடக்கம் ஆகிறது.

மேற்கூறப்பட்ட இரண்டு கருத்துகளையும் இணைத்து மேலும் தெளிவடையும் வகையில் அடக்கமுடைமை எனும் அதிகாரத்திலுள்ள பின்வரும் குறட்பா காணப்படுகிறது.

‘ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ……’ (126)

அதாவது, ஆமை தனக்கு ஆபத்து வரும் வேளையிலோ அல்லது தனக்கு ஒவ்வாத செயல் நடக்கின்ற பொழுதோ தனது உறுப்புகளை ஓட்டுக்குள் அடக்கிக்கொள்வது போல மனிதனும் அநீதியான செயல்களை செய்ய விளையும் போது அறிவு என்னும் ஓட்டுக்குள் தன்னைக் கட்டும் போது பெருமையடைகிறான்; பாதுகாப்பு பெறுகிறான்; தற்காப்பு பெறுகிறான். எனவே புலனடக்கம் என்பது பொறிகளின் வழி வெளிப்படும் புலன்களை பக்குவப்படுத்தல், பாதுகாத்தல் என்பதை தெளிவுறச் செய்வதோடு, ஐம்புலன்களை பக்குவப்படுத்த வேண்டிய சந்தர்ப்பம் பற்றிய தெளிவையும் ஏற்படுத்துகிறது.

இவ்வாறு ஐம்பொறிகளின் வாயிலாக வெளிப்படும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐம்புலன்களை ஆராய்ந்து அறிவின் ஆற்றலினால் தன்னிலை, தேவையறிந்து அதனை பக்குவப்படுத்தல் இன்றிமையாதது. அதுவே புலனடக்கமாகிறது. அல்லாது பொறிகளை அடக்கி அதன் வழி வெளிப்படும் புலன்களை அடக்குவது புலனடக்கமாகாது என்பது வலியுறுத்தப்படுகிறது. எனவே பொறிகளின் வழிவெளிப்படும் ஐம்புலனை கட்டுப்படுத்துவதே புலனடக்கம் என்பது தெளிவாகிறது.

அறத்திற்கு மாறான செயல்களை செய்யும் போது புலன்களை கட்டுப்படுத்தும் ஆற்றல் பெற்றவன் ஏழுபிறப்பிலும் சிறப்படைவான் என்று புலனடக்கத்தின் இன்றியமையாமை வெளிப்படுத்தப்படுகிறது. ‘துறவு’ எனும் அதிகாரத்தில்,

‘…………ஐந்தன் புலத்தை விடல் வேண்டும்……’ (343)

ஐந்து புலன்களை விடல் வேண்டும் என்று கூறப்படுகிறது. இக்குறட்பாவிலும் வீடுபேறு வேண்டுமெனில் ஐம்புலன்களை விடல் வேண்டும், அதாவது அறிவால் உணர்ந்து ஐம்புலன்களை கட்டுப்படுத்த வேண்டும். அவசியத்தை அறிந்து அறிவால்

உணர்ந்து ஐம்புலன்களை கட்டுப்படுத்தும் போது அச்செயல் வெற்றியடைகின்றது அன்றி அதனை அடக்கநினைத்தால் அது முடியாத காரியமாகிவிடும். எனவே விடல் என்பது தேவையை அறிந்து பொருத்தமற்றவற்றை விடல் அதாவது கட்டுப்படுத்தல் அல்லது வெற்றிகொள்ளல் எனப்படுகிறது. அத்தோடு

"ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயனின்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு."(354)

என்ற குறட்பா மேற்கூறப்பட்ட கருத்தைப் பறைசாற்றி நிற்கிறது. அதாவது புலன்களை அடக்கக்கற்றவர் என்றபோதிலும் உண்மையை ஆராய்ந்து அறியும் தன்மை இல்லாதவரிடம் காணப்படும் அவ்வடக்கத்தால் எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை என வலியுறுத்தப்படுகிறது. உண்மையை ஆராய்ந்து அறியும் மெய்யுணர்வு இல்லாதவர் புலன்களை அறிந்து கட்டுப்படுத்தும் ஆற்றல் இல்லாதவராகிறார். எனவே புலன்களை அடக்கும் போது அவ்வடக்கத்தால் பயனடையப்போவதில்லை. மாறாக உண்மையை உணர்ந்து அவற்றை கட்டுப்படுத்துப் போது அப்புலனடக்கத்தால் பல நன்மைகளைப் பெற்றுக்கொள்கிறார். ஆகவே, புலனடக்கம் என்பது ஆராய்ந்து அறிவின் வழி புலன்களை சீர்மைப்படுத்தி நன்னெறியில் செலுத்தும் பக்குவப்பட்ட நிலையே அதனை விடுத்து அவற்றைப் பற்றி அறியாது அடக்குவதல்ல எனும் விடயமே வள்ளுவத்தின் வழி வெளிப்பட்டு நிற்கிறது. குறிப்பாக இதன்வழி புலனடக்கம் என்பது புலன்களை அடக்கிவைத்தல் என்பதல்ல அதனை நல்வழியில் செலுத்துதல் என்பதுவேயாகும் என்பது வெளிப்படுகிறது.

### III. பொறிகளின் இயக்கமும் அதன் அவசியமும்

ஐம்பொறிகளின் இயக்கம் அல்லது செயற்பாட்டின் அவசியம் பற்றி பின்வரும் குறட்பா தெளிவுபடுத்துகிறது.

கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை. (09)

அதாவது எண்குணங்களைக் கொண்ட இறைவனை வணங்காத் தலை தனக்கேற்ற புலன்கள் இல்லாத இயங்காத பொறிகளைப் போல் பயனற்றது எனப்படுகிறது. இதனடிப்படையில் பார்க்கும் போது பொறிகளின் இயக்கம் இன்றியமையாதது என்பது வலியுறுத்தப்படுகிறது. இவ்வாறு பொறிகள் இயங்கும் போது அவ்வியக்கத்தின் வாயிலாக வெளிப்படுவது புலன்கள் எனப்படுகின்றன. இவ்வகையில் பொறிகளின் இயக்கமும் அவற்றின் வழி வெளிப்படும் ஐம்புலனும் அவசியம் என்பது புலனாகின்றது. எனவே திருக்குறள் பொறிகளை இயங்கவிடாது செய்து அவற்றின் வழி வெளிப்படும் புலன்களை அடக்குவது புலனடக்கம் அல்ல அவற்றின் இயக்கமும், புலன்களின் வெளிப்பாடும் இன்றியமையாதது என்பதை வெளிப்படுத்துகிறது.

### IV. புலனடக்கத்தினால் கிட்டும் நன்மைகள்

ஆமை ஓட்டில் ஐம்புலன்களை அடக்குவது போல தன் புலன்களைப் கட்டுப்படுத்துபவர்கள் இல்லாமையை எண்ணி வருத்தப்படமாட்டார்கள், அவர்களிடம்

இல்லாமை தோன்றாது. இதனால் ஏழு பிறவிகளிலும் பெருமை பெறுகிறார்கள், அப்பெருமை பல பிறவிகளிலும் அவர்களுக்கு காவலாய் அமைகிறது. புலன்களின் வழி தோன்றும் ஆசைகளை அறிவால் வெல்லுதல் வேண்டும். ஐம்புலன்கள் ஐம்பொறிகளின் வழி செல்லாது அடக்குவதைக் காட்டிலும் அவற்றை அறிவால் கட்டுப்படுத்தி நெறிப்படுத்திக்கொள்வதே சிறப்பு அவ்வாறு செல்பவனின் அறிவை உலகம் போற்றும்.

‘…… ………. ஆற்றின்
எழுமாப்பும் ஏமாப் புடைத்து.’ (126)

‘…………..இந்திரனே சாலுங் கரி.’(25)

‘……வரனென்னும் வைப்பிற்கோர் வித்தது.’ (24)

போன்ற குறட்பாக்கள் அத்தகு நன்மைகள் கிடைக்குமாற்றை வெளிப்படுத்துகின்றன.

‘அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை விடல் வேண்டும்
வேண்டிய வெல்லாம் ஒருங்கு’ (343)

என்ற குறட்பாவின் வழி வீடு பேறு வேண்டுமெனில் ஐம்புலன்களை விடல் வேண்டும். அத்தோடு அவற்றின் பொருட்டு சேர்த்து வைத்த பொருள் அனைத்தையும் விடல் வேண்டும். ஏனெனில், எல்லாவற்றின் மீதும் ஆசை அல்லது பற்று ஏற்பட புலன்கள் காரணமாக இருப்பதால் அவற்றை விடவேண்டும். அவ்வாறு உலக விடயங்களை இல்லாது செய்பவனிடம் இல்லாமை தோன்றாது என்று ஐம்புலனடக்கத்தினால் கிடைக்கும் நன்மை பற்றிக் கூறப்படுகிறது. மேலும் அறத்திற்கு மாறான செயல்களை செய்யும் போது புலன்களை கட்டுப்படுத்தும் ஆற்றல் பெற்றவன் ஏழுபிறப்பிலும் சிறப்படைவான் என்று கூறப்படுகிறது. அதுமட்டுமின்றி வகைதெரிந்து புலன்களை கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டவன் உலகத்தை கட்டுப்படுத்தும் ஆற்றல் பெறுகிறான்.

### V. அதிகார வைப்பின் வழி புலனடக்கம்

திருக்குறளில் அறத்துப்பால் முப்பதெட்டு அதிகாரங்களையும், பொருட்பால் எழுபது அதிகாரங்களையும், காமத்துப்பால் இருபத்தைந்து அதிகாரங்களையும் கொண்டு காணப்படுகின்றன. இவற்றுள் அறத்துப்பால் பாயிரம், இல்லறவியல், துறவியல், ஊழியல் எனும் நான்கு கூறுகளைக் கொண்டு முப்பத்தெட்டு அதிகாரங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுவதோடு, அதன் உட்கூறுகளான பாயிரவியலில் ஐம்பொறிகள், ஐம்புலன் சார்ந்தவையாக சுமார் ஐந்து குறட்பாக்களும், இல்லறவியவில் இரண்டு குறட்பாக்களும், துறவியலில் இரண்டு குறட்பாக்களும் ஊழியலில் ஒரு குறட்பாவுமாக காணப்படுகின்றன.

கடந்தும், உள்ளேயும் இருக்கும் பண்புடையவன் கடவுள் எனப்படுவான். இத்தகு கடவுளை வாழ்த்திபாடும் கடவுள் வாழ்த்தில் 06ஆவது, 09 ஆவது குறட்பாக்கள் புலனடக்கம் பற்றி வலியுறுத்துகின்றன. ஐம்பொறிகளின் வழி வெளிப்படும் ஐம்புலன்களை கடந்து வாழும் பண்பு கடவுளுக்குரியது என்ற அடிப்படையில் இவ்விரு குறட்பாக்களும் காணப்படுகின்றன. உலகத்து உறவுகளை துறந்து அறநூல்கள் புகழ்ந்துரைக்கும் துறவிகளைப் பற்றிக் கூறும் நீத்தார் பெருமை எனும் அதிகாரத்தில்

© 2021, IRJTSR

24,25, 27 ஆகிய குறட்பாக்கள் புலனடக்கம் பற்றி வலியுறுத்துகின்றன. இவை ஐம்புலன்களை கட்டுப்படுத்தி அவற்றினை தீய வழியிற் செல்லாது சீர்மைப்படுத்தல் புலனடக்கம் எனும் கருத்தை வெளிப்படுத்துகின்றன. ஐம்புலன்களை நீத்தலே துறவிகளின் பெருமைக்கு சான்று என்பதால் பிற அதிகாரங்களைப் பார்க்கிலும் இவ்வதிகாரத்திpல் அதிக குறட்பாக்களில் ஐம்புலனடக்கம் விளக்கப்பட்டுள்ளது. இல்லறவியலில் அடக்கமுடைமை எனும் அதிகாரத்தில் பணிவு, செல்வம் கொண்ட போதும் பணிவு, நாவடக்கம் போன்ற விடயங்களும் அவற்றின் அவசியமும் கூறப்பட்டுள்ளது. இருப்பினும் இவ்வதிகாரத்தில் ஐம்புலனடக்கம் ஏழுபிறப்பிலும் நன்மை பெற்றுத்தரும் என்று கூறப்படுவதனூடாக ஐம்புலனடக்கத்தின் இன்றியமையாமை வலிறுத்தப்பட்டுள்ளது. மேலும் பிறரின் பொருளை பெற நினைத்தல், கவருதல், கையேந்திப் பெறுதல் போன்றவற்றை வெளிப்படுத்தும் வெஃகாமை எனும் அதகாரத்தில்; ஐம்புலன்களே ஆசைகள் தோன்றக் காரணம் எனவே புலன்களை கட்டுப்படுத்தி விட்டால் இல்லாமை தோன்றாது என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. துறவியலில் ஐந்து புலன்களின் ஆசைகளையும் விட்டுவிட வேண்டும் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளதோடு, மெய் உணர்தல் என்பது மனித வாழ்க்கையில் அறியாமை, தீய வாழ்க்கை என்பவற்றில் செல்வாக்கு செலுத்தும் காமம், சினம், மயக்கம் என்ற மூன்றும் எம்மில் தாக்கம் செலுத்தாது இருப்பது அவற்றின் நிலை உணர்தல் மெய்யுணர்தல் எனப்படுகிறது. பயனற்ற பொய்மையை உணரவேண்டும். அவ்வாறு இல்லாத போது ஐம்புலன்களை கட்டுப்படுத்தியும் மெய்மையை உணராவிடில் அது பயனற்று போய்விடுகிறது. எனவே ஐம்புலன்களை வகைதெரிந்து உணர்ந்து கட்டுப்படுத்தல் வேண்டும் என்பது புலனாகிறது.

பொருட்பாலில்; பொறிகள் தனித்து அவற்றின் செயற்பாடு, தன்மை, முக்கியத்துவம் என்பன கூறப்பட்டுள்ள நிலையில் காமத்துப்பாலில் ஐம்பொறிகளால் பெறப்படும் இன்பம் வளையல்கள் அணிந்த மனைவயிடம் மட்டுமே உண்டு என்று ஒரு குறட்பாவில் கூறப்படுகிறது. இவ்வாறாக புலனடக்கம் சார்ந்த விடயங்கள் கடவுள் வாழ்த்து, நீத்தார் பெருமை, அடக்கமுடைமை, வெஃகாமை, கூடாஒழுக்கம், துறவு, மெய்யுணர்தல், புணர்ச்சி மகிழ்தல் ஆகிய அதிகாரங்களில் சுமார் பதினொறு குறட்பாக்களில் அறத்துப்பாலில் பரவலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

வாழும் கலையை பாடமாகப் புகட்டும் திருக்குறளில் புலனடக்கம் சார்ந்த விடயம் தனியொரு அதிகாரத்தில் வைக்கப்படாது பரவலாக எட்டு அதிகாரங்களில் பேசப்பட்டுள்ளமையானது புலனடக்கம் என்பதை தனியொரு தலைப்பு சார்ந்த விடயமாக மட்டுப்படுத்தி நோக்குவது பொருத்தமற்றது. அது வாழ்வின் பல்வேறு பாகங்களில் அவசியமானது அதன் அவசியத்தை வாழ்வின் எல்லா சந்தர்ப்பத்திலும் உணர வேண்டும் என்ற நோக்கில் அதனை பகுத்து வழங்கியிருக்கும் வள்ளுவர் அதன் வழி வாழ்வின் எல்லா கட்டத்திலும் அதனைப் பின்பற்ற வலியுறுத்துகிறார்;. மேலும் அறத்துப்பாலில் அதிகம் பேசியிருப்பது புலனடக்கம் என்பது அறமாய் பின்பற்றப்பட வேண்டியது என்பதை வலியுறுத்துகிறது. அத்தோடு புலனடக்கம் என்பது நிலையாத

புகழைப்பெற்றுத் தருவதோடு இல்லறம், துறவறம் இரண்டிலும் புலனடக்கம் பற்றிய கருத்துகள் கூறப்பட்டுள்ளன. புலனடக்கம் சார்ந்த விடயத்தை அதிகாரமொன்றில் மட்டுப்படுத்தும் போது அதன் இன்றியமையாமை மலுங்கடிக்கப்பட்டு விடும் என்பதோடு, எத்தகைய மனிதனாயினும் புலனடக்கம் இன்றியமையாது என்பதை அதிகாரங்களைப் பரவலாய் பல அதிகாரங்களில் பகுத்துத் தந்துள்ளார் வள்ளுவர்.

## VI. முடிவுரை

நன்னெறிக்கு வழிகாட்டும் அறிவியலை விபரிக்கும் அறத்துப்பால் இயற்கையோடு ஒத்துப்போகும் வகையில் புலனை சீர்மைப்படுத்துவது புலனடக்கம் என்கிறது. ஐம்பொறிகள் சார்ந்த ஐம்புலன்களை கட்டுப்படுத்தும் ஐம்புலனடக்கம் சார்ந்த விடயங்கள் அறத்துப்பாலின் தெளிவாகக் கூறப்பட்டு அது தொடர்பான விடயங்கள் பின்வருகின்ற பொருட்பாலிலும், காமத்துப்பாலிலும் கூறப்படவில்லை. அறம் போதிக்கும் அறத்துப்பாலில் போதிக்கப்படும் அறமானது மானிடனின் வாழ்க்கையில் இரண்டறக்கலந்துவிட்ட விடயமாக காணப்படுகின்ற காரணத்தினால் முதற்பாலில் விளக்கப்பட்டு பின்னைய பாக்களில் பேசபப்டவில்லை எனலாம். எனவே மானிடனின் தனிச்சிறப்பாகிய மன அறிவைக் கொண்டு ஐம்புலன்களை சீர்;மைப்படுத்துவதை விடுத்து புலன்களை அடக்கிவைத்து துன்புற்று வாழ்வது சிறப்பு தராது என புலன்களை வகையறிந்து அறிவால் ஆட்சிகொள்ளும் வகைமையை வெளிப்படுத்தி நிற்கின்றது திருக்குறள். அத்தோடு புலனடக்கம் என்பது அறமாக கருதப்படவேண்டியது என்பதால் அறத்துப்பாலில் பாயிரவியலில் அதனை வலியுறுத்தி இல்லறம், துறவறம் இரண்டிலும் அதனைக் கடைப்பிடிக்கவேண்டியதன் அவசியம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இதன் அவசியம் உணர்ந்து முதற்பாலில் விதந்து கூறி பின்னையவற்றில் அதனை பின்பற்றச் செய்திருப்பதோடு ஐம்புலனடக்கம் என்பது தனி அதிகாரமாய் நோக்கப்படாது பல அதிகாரங்களிலும் பேசப்பட்டிருப்பது வாழ்க்கையிற் காணப்படும் பல விடயங்களிலும் பின்பற்றப்பட வேண்டும் என்பதால் அதனை தனித்து நோக்காது பல தலைப்புகளிலும் பகுத்து விளக்கியிருப்பது வள்ளுவத்தின் சிறப்பாகக் காணப்படுகிறது. குறிப்பாக ஐம்பொறிகளை கட்டுப்படுத்துவதை வலியுறுத்தாது அவற்றின் வழி வெளிப்படும் புலன்களை வகைதெரிந்து, அறிவால் கட்டுப்படுத்துவதை வலியுறுத்தி வாழ்வுக்கு வழிகாட்டுகிறது திருக்குறள்.

## உசாத்துணை நூல்கள்

[1] திருவள்ளுவர் – திருக்குறள்

[2] சௌரிராசன். பொன், (2005), திருக்குறளில் பொதுநிலை உத்திகள், சென்னை: உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.

[3] புலியூர்க்கேசிகன்., (2010), இருபத்தி ஏழாம் பதிப்பு, திருக்குறள் புதிய உரை, சென்னை; பூம்புகார் பதிப்பகம்.